**STELLA MARIS COLLEGE (AUTONOMOUS), CHENNAI 600 086**
**(For candidates admitted during the academic year 2017–2018 & thereafter)**

**B.Voc. DEGREE EXAMINATION, APRIL 2023**
**FOURTH SEMESTER**

| | | | |
|---|---|---|---|
| **COURSE** | **:** | **FOUNDATION – COURSE** | |
| **PAPER** | **:** | **VOCATIONAL SANGA TAMIL** | |
| **SUBJECT CODE** | **:** | **17TM/FC/VS44** | |
| **TIME** | **:** | **3 HOURS** | **MAX. MARKS: 100** |

**பிரிவு - அ**

**I. அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கவும்** **(10×1=10)**

1. தலைவனை நள்ளிரவில் வரவேண்டாம் என்று கூறியவள் யார்?
2. முல்லைத் திணைத் தலைவி எதனைப் பிசைந்து குழம்பு செய்தாள்?
3. தாமரைத் தாதால் சந்தன மரத்தில் தொடுக்கப்பட்டது எது?
4. எதனை உம்மை விடச் சிறந்தது என்று அன்னை கூறினாள்?
5. யாருக்கு ஆண்டுகள் பல ஆகியும் நரை இல்லை?
6. ‘எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே’ என்றவர் யார்?
7. பறம்பு மலையை ஆண்ட மன்னன் யார்?
8. ‘அமிழ்துவிளை தீங்கனி’ எது?
9. காவல் இல்லாததால் தினைப்புனத்தை அழித்தது எது?
10. தலைவன் யானையை எப்படி விரட்டினான்?

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக** **(5×1=5)**

1. குறுந்தொகையைத் தொகுத்தவர் ………………….
2. நற்றிணையின் அடிவரையறை ………………….
3. தமிழர் வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழும் நூல் ………………….
4. சிறுபாணாற்றுப்படை …………… அடிகளைக் கொண்டது.
5. குறிஞ்சிப்பாட்டை நச்சினார்க்கினியர் ……………… என்று சிறப்பித்தார்.

**III. பொருத்துக** **(5×1=5)**

| | | |
|---|---|---|
| 1. குறுந்தொகை | – | அ. கபிலர் |
| 2. நற்றிணை | – | ஆ. 205 புலவர்கள் |
| 3. புறநானூறு | – | இ. பன்னாடு தந்த மாறன் வழுதி |
| 4. சிறுபாணாற்றுப்படை | – | ஈ. புறத்திணை |
| 5. குறிஞ்சிப்பாட்டு | – | உ. கடையெழு வள்ளல்கள் |

**பிரிவு - ஆ**

**IV. இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக (எவையேனும் நான்கனுக்கு)** **(4×4=16)**

1. “இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே”

2. “அன்னை கூறினள் புன்னையது நலனே –
அம்ம! நாணுதும் நும்மொடு நகையே”

3. “புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்”

4. “கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்”

5. “மையல் வேழம்இ மடங்கலின் எதிர்தர
உய்வு இடம் அறியேம் ஆகி”

6. “நிலம் தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்
விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்”

**V. செய்யுள் வினா (எவையேனும் மூன்றனுக்கு) (3×8=24)**

1. குறுந்தொகையில் இடம்பெறும் பாடல்களின் செய்திகளைத் தொகுத்தெழுதுக.
2. நற்றிணையில் கபிலர் பாடிய பாடலின் கருத்தை எடுத்துரைக்க.
3. வயதாகியும் நரை இல்லையே என்று கேட்டோருக்கு பிசிராந்தையார் கூறியது என்ன?
4. சிறுபாணற்றுப்படையின் வழி கடையெழு வள்ளல்களின் சிறப்பினை விவரிக்க.
5. யானை தினைப்புனத்தை அழித்ததையும் தலைவன் யானையைத் துரத்தியதையும் குறிஞ்சிபாட்டின் வழி எடுத்துரைக்க.

**VI. இலக்கிய வரலாறு (ஏதேனும் ஒன்று): (1×15=15)**

1. குறுந்தொகை
2. புறநானூறு
3. குறிஞ்சிப்பாட்டு

**பிரிவு - இ**

**VII. நாடகம் (ஏதேனும் ஒன்று): (1×15=15)**

பொம்மக்காவின் மூன்று பெண்கள் நாடகத்தில் நல்லதங்காள் பாத்திரப் படைப்பில் ஆசிரியர் காந்திமேரி செய்துள்ள புதுமையை விரித்துரைக்க.

(அல்லது)

பொம்மக்காவின் மூன்று பெண்கள் நாடகத்தின் மூலம் ஆசிரியர் காந்திமேரி முன்வைக்கும் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளைத் விளக்குக.

(அல்லது)

பொம்மக்காவின் மூன்று பெண்கள் நாடகத்தில் முன்வைக்கப்படும் பெண்ணியக் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**VIII. கடிதம் (ஏதேனும் ஒன்று): (1×10=10)**

உமது பகுதியில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதால் அதனைத் தீர்க்கக் கோரி மின்சார வாரியத்துக்கு ஒரு கடிதம் வரைக.

(அல்லது)

நீவிர் கண்ட மலர்க் கண்காட்சியின் அழகையும் சிறப்பையும் குறித்து வேறு ஊரில் உள்ள உமது தோழிக்குக் கடிதம் வரைக.

**********